
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1198

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

60

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# முரட்டுப் பெரியார் தொண்டர்!



பெரியாரின் முரட்டுத் தொண்டர்களாகப் பகுத்தறிவுக் கொள்கைகளையும் சாதி ஒழிப்புச் சிந்தனைகளையும் கிராமம் கிராமமாகச் சென்று பரப்பி, அதே வேளையில் திராவிட முன்னேற்றக் கழகத்திலும் வெகு மக்களால் ஈர்க்கப்பட்ட வலுவான அரசியல் பிம்பமாகப் பயணித்தவர்கள் பேரறிஞர் அண்ணா காலத்திலும் முத்தமிழறிஞர் கலைஞர் காலத்திலும் ஏராளமானோர் உண்டு.

அந்தப் படைவரிசையில் தனிப்பெரும் இடமும் புகழும் கொண்ட சுயமரியாதைச் சுடரொளி கா.சொ.கணேசன், அரியலூர் மாவட்டத்தில் ஜெயங்கொண்டம், உடையார் பாளையம், தா.பழூர் ஆகிய பகுதிகளில் இவரின் பாதம் படாத இடமே இல்லை. அரியலூர், பெரம்பலூர், கரூர் உள்ளிட்ட அண்டை மாவட்டங்களை உள்ளடக்கிய பழைய ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்தில், ஊர் ஊராகச் சென்று திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைக் கோட்பாடுகளை, மக்கள் மத்தியில் எடுத்துரைத்து, மத்திய மாவட்டங்களை, திராவிட இயக்கத்தின் அசைக்க முடியாத கோட்டையாக வைத்திருக்கப் பாடுபட்ட அரும்பெருந்தொண்டர்களில் இவரும் ஒருவர்.

அரியலூர் மாவட்டத்தில் கொள்ளிடம் நதியை ஒட்டியுள்ள சிறிய கிராமம், கண்டியங்கொல்லை. அங்கு, சொக்கலிங்கம் - அஞ்சலையம்மாள் தம்பதிக்கு மூன்றாவது மகனாக 1941-ஆம் ஆண்டு பிறந்தவர் கா.சொ.கணேசன். உள்ளூரிலேயே தொடக்கக் கல்வியையும், அங்கிருந்து 11 கி.மீ. தொலைவில் இருந்த மீன்சுருட்டி உயர்நிலைப் பள்ளியில், 10-ஆம் வகுப்பு வரையிலும் பயின்றார். அசைக்க முடியாத கொள்கைவாதியாக - மக்கள் நலன் விரும்பியாக கா.சொ.கணேசனை திராவிட இயக்கத்துக்கு வார்த்துக்கொடுத்தவர், திராவிடர் கழக தீவிர பிரச்சாரக்காரராகச் செயல்பட்ட அணைக்கரை டேப் தங்கராசு. உடையார்பாளையத்தில் இவருடைய டேப் ஒலிக்காத தெருக்களே இல்லை என்கிற அளவுக்குப் பரப்புரை செய்துள்ளார். அவருடைய அண்ணன் மகன்தான் கா.சொ.கணேசன். சித்தப்பாவின் பகுத்தறிவுச் சிந்தனைகளால் வளர்க்கப்பட்ட கா.சொ.கணேசன், இளம் வயதிலேயே அவருடன் இணைந்து, பொதுக்கூட்டங்களில் பேச ஆரம்பித்தார்.

அப்படித் தொடங்கிய அவரது திராவிட இயக்கப் பயணம், தி.மு.க. என்ற அரசியல் பேரியக்கமாகப் பரிணமித்தபோது, முழுநேர கழகச் செயல்பாட்டாளராக மாறினார். இரட்டைக்குழல் துப்பாக்கியைப் போல ஒரு பக்கம் அரசியல் பணிகளையும், மற்றொரு பக்கம் சுயமரியாதைத் திருமணங்களையும் நடத்திவைப்பது, பகுத்தறிவுச் சிந்தனைகளைப் பரப்புவது எனப் பெரியாரிய தத்துவப் பரப்புரைகளையும் மேற்கொண்டார். கலைஞர் தலைமையில் திருமணம் செய்ய அழைத்து வந்துவிட்டு, ராகு காலம் வரட்டும், அந்த நேரத்தில்தான் திருமணம் செய்வேன் என்று கலைஞரையே காக்க வைக்கும் அளவுக்கு கொள்கைப் பிடிப்பு கொண்டவராக வாழ்நாளின் இறுதிவரை உறுதியோடு செயல்பட்டார்.

இரண்டு முறை ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர், இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினர் என அதிகாரம் மிக்க பொறுப்புகளை வகித்த வேளைகளில், கிராமங்களுக்கான அடிப்படை வசதிகளைச் செய்து தருவதிலும் முன்மாதிரியாகச் செயல்பட்டு, மக்கள் மனங்களை வென்ற மாண்பாளர். கலைஞர், அமைச்சர்கள் பலரை தொகுதிக்கே அழைத்துச் சென்று, தொகுதி மக்களின் கோரிக்கைகளைச் சுட்டிக்காட்டி, நிறைவேற்றித் தருமாறு பிடிவாதம் பிடித்த வேளைகளில், அவருடைய தொகுதி மக்களின் நலன்தான் முதன்மை இடத்திலும் கட்சி, ஆட்சி என மற்றவையெல்லாம் இரண்டாம் இடத்திற்குச் சென்றுவிடும் என்பதைப் பலமுறை வெளிக்காட்டியிருக்கிறார்.

அந்த அளவுக்கு மக்களின்மீது பேரன்பு கொண்டவராக, ஜெயங்கொண்டம், தா.பழூர் பகுதிகளில் அவர் ஏற்படுத்திய கொள்கைத் தாக்கங்கள், தடயங்களாக இன்றும் வரலாற்றில் பதிந்திருக்கின்றன. அந்தத் தடயங்களைத் தேடி நம் விரல்கள்.

...பயணம் தொடரும்

## சட்டசபை என்பது சோசியல் மீடியா அல்ல!

“சோஷியல் மீடியா மூலம் ஆட்சியைப் பிடிக்கலாம். ஆனால், சோஷியல் மீடியா மூலம் ஆட்சியை நடத்த முடியாது என்பதை விஜய் உணர்ந்திருப்பார்” என்று பதிவிட்டுள்ளார், பத்திரிகையாளர் சுகுணா திவாகர்.

மேலும், ‘தயாரிக்கப்பட்ட உரையை ஒரு தலைவர், பொதுக் கூட்டத்தில் பேசலாம்; சட்டமன்றத்தில்கூட பேசலாம். ஆனால், சட்டமன்றத்தில் மாற்றுக்கட்சிகளின் கேள்விகளுக்கு, உடனுக்குடன் பதில் சொல்ல டைமிங் சென்ஸ் வேண்டும். இன்று எப்படியும் தங்கள் அரசை யாராவது ‘மைனாரிட்டி கவர்ன்மென்ட்’ என்று சொல்வார்கள், ‘குதிரை பேரம்’ என்று சொல்வார்கள் என்று யூகித்து, அதற்கான அளவான இரண்டு பஞ்ச் டயலாக்குகளுடன் வந்துவிட்டார் விஜய். ஆனால், வன்னி அரசு உரையில் கல்புர்கி, கௌரி லங்கேஷ், தமிழீழம் தொடங்கி, பிரேமலதா, உதயநிதி வரை சுற்றிவளைத்த தாக்குதல்களால் அவர் திணறிவிட்டார் என்றுதான் சொல்ல வேண்டும்.

‘குதிரை பேர’த்துக்கு ‘குதிரை வேகம்’ பஞ்ச் டயலாக். ஆனால், அவருடைய அரசுக்குப் பெரும்பான்மை இல்லை என்றுதான் சொல்லப்பட்டதே தவிர, யாருமே ‘சிறுபான்மை அரசு’, ‘மைனாரிட்டி கவர்ன்மென்ட்’ என்றெல்லாம் சொல்லவில்லை. இருந்தாலும், எழுதி வந்த ஸ்கிரிப்ட்டை வீணாக்க வேண்டாமே என்று பேசிவிட்டு, சில மணி நேரங்களுக்குப் பிறகு உதயநிதிக்கு சோஷியல் மீடியாவில் பதில் அளித்திருக்கிறார். அவர் பேசிய ‘சிறுபான்மை அரசாங்கம்’ பஞ்ச் டயலாக்குக்கும் முன்னுதாரணம் கலைஞர்தான்.

கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, எதிர்க்கட்சி எம்.எல்.ஏ ஒருவர், “உங்கள் அரசு மூன்றாந்தர அரசு” என்று விமர்சித்தார். உடனே ‘இது மூன்றாந்தர அரசு அல்ல; நாலாந்தர அரசு. வர்ணாசிரமப் படிநிலையில் நான்காவது வர்ணமான சூத்திரர்களின் அரசு” என்று பதில் அளித்தார். இந்த வரலாறு தெரிந்த ஒருவர்தான் விஜய்க்கு அந்த ‘சிறுபான்மை அரசாங்கம்’ பஞ்ச் டயலாக்கை எழுதிக் கொடுத்திருக்கிறார். ஆனால், கலைஞருக்கு இருந்த டைமிங் சென்ஸ்தான் அவரை அந்தப் பதிலைக் கூற வைத்தது. விஜய்க்கு டைமிங் சென்ஸ் இல்லாததால், சட்டசபையில் பதில் கூற முடியாமல் தோற்றிருக்கிறார். பனையூருக்கு எல்லோரையும் வரவைக்கலாம். ஆனால், சட்டசபையை சோஷியல் மீடியாவில் கூட்ட முடியாது சி.எம். சார்!’ என்கிறது அவரது பதிவு.

## ஃப்ளாஷ்பேக்



### பாசறைக் கூட்டத்தில் சான்றிதழ்!



கோட்டை ப.ராமு

1999-ஆம் ஆண்டு, ஈரோடு மாவட்ட இளைஞர் அணி சார்பில், மொடக்குறிச்சியில் பயிற்சிப் பாசறைக் கூட்டம் நடைபெற்றது. அப்போது, ஈரோடு நகர இளைஞர் அணி துணை அமைப்பாளராக இருந்த நான், தலைவரிடமிருந்து சான்றிதழ் பெற்றேன். நிகழ்ச்சியில், அன்றைய ஈரோடு மாவட்டக் கழகச் செயலாளர், கைத்தறித் துறை அமைச்சராக இருந்த அண்ணன் என்.கே.கே.பெரியசாமி, அண்ணன் அன்பில் பொய்யாமொழி, அண்ணன் எவரெஸ்ட் மு.கணேசன், அண்ணன் மு.பெ.சாமிநாதன், அண்ணன் பி.கே.பழனிசாமி எனப் பலரும் உடனிருந்து வாழ்த்தினர்.

- கோட்டை ப.ராமு,

முன்னாள் நகர இளைஞர் அணி அமைப்பாளர், ஈரோடு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

110

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

# நிர்வாகத் திறன் நாடகமல்ல; திராவிட மாடல் சொல்லும்!



**‘தி.மு.க. ஆட்சிக்காலத்தில் கடன் சுமையை ஏற்றி கஜானாவைக் காலி செய்து விட்டதால், புதிய அரசின் திட்டங்களை நிறைவேற்ற, அவகாசம் தேவை’ என்று பதவி யேற்பு மேடையில் விஜய் சொல்லியிருக்கிறாரே?**

சினிமாவில் ஆட்டம் போட்டு, ரசிகர் கூட்டத்தை உருவாக்கி, அதையே அரசியலுக்கும் பயன்படுத்திய விஜய், இப்போது பதவிப் பொறுப்புக்கு வந்ததும், ‘ஆடத் தெரியாதவர் மேடை கோணல்’ என்று சொன்ன கதையாக, தொடக்கத்திலேயே பழி போடும் அரசியலைக் கையில் எடுக்க முனைந்திருப்பது வெட்கக் கேடானது மட்டுமல்ல, அவருக்கு நிர்வாகத் திறன் பற்றிய அடிப்படைப் புரிதல்கூட இல்லை என்பதையே பதவியேற்பு விழாவில் பேசிய பஞ்ச் டயலாக் பாணி உரை காட்டுகிறது.

ஒரு மாநிலத்தின் அல்லது ஒரு நாட்டின் கடன் அளவு என்பதை, அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பதுதான் பொருளாதாரப் பார்வை.

பிரதமர் மோடியின் தலைமையிலான பா.ஜ.க. அரசு, கடந்த 14 ஆண்டுகளில் 125 இலட்சம் கோடி ரூபாய் அதிக அளவு கடன் பெற்றுத்தான் இந்தியாவை நிர்வகித்து வருகிறது. அந்தக் கடனைப் பெறுவதற்கேற்ற மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியில், தமிழ்நாட்டின் பங்கும் மிக முக்கியமானது. இந்தியாவிலேயே இரட்டை இலக்கப் பொருளாதார வளர்ச்சி கொண்ட ஒரே மாநிலமாக, கடந்த இரண்டாண்டுகளாகத் தொடர்ந்து சாதனை படைத்து வரும் தமிழ்நாட்டைத்தான் புதிய அரசிடம் ஒப்படைத்துச் சென்றிருக்கிறார், திராவிட மாடல் அரசின் முதல்வராக இருந்த மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

இந்திய அளவில், பல்வேறு இலக்குகளில் முன்னேறிய மாநிலமாகவும், முதன்மை இடம் பெற்ற மாநிலமாகவும் தமிழ்நாடு உள்ளது. பிற மாநிலங்களில் புதிதாக அமைந்துள்ள அரசுகளும்கூட, தமிழ்நாட்டில் திராவிட மாடல் ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களைத்தான் பின்பற்றுகின்றன. அந்த அளவுக்கு இந்திய மாநிலங்களுக்கு முன்னோடி மாநிலமாகத் தமிழ்நாட்டை உருவாக்கி வைத்துள்ளது திராவிட மாடல் அரசு.

10 இலட்சம் ரூபாய் கடனை யார் தலையிலும் தூக்கி வைக்கவில்லை. அதனை வளர்ச்சித் திட்டங்களாக, சிறந்த உள்கட்டமைப்பாக உருவாக்கி வைத்துள்ள தி.மு.க. ஆட்சிமீது பழிபோட்டு அரசியல் செய்யாமல், கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டியதுதான் புதிய அரசின் கடமையும் பொறுப்பும் ஆகும். கழகத் தலைவர் அவர்களே சொல்லியிருப்பது போல, முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் சேர்த்து வைக்கப்பட்ட கடன், கொரோனா இரண்டாவது அலையின் கொடும் தாக்கம், ஒன்றிய பா.ஜ.க. அரசின் தமிழ்நாட்டின் மீதான வஞ்சகம் இவற்றையெல்லாம் எதிர்கொண்டு தான், பதவிப்பொறுப்பேற்ற நாளிலேயே, ‘விடியல் பயணம்’, ‘பால் விலை குறைப்பு’, ‘கொரோனா நிவாரணத் தொகை 4,000 ரூபாய்’ ஆகியவற்றை வழங்கியது தி.மு.க. அரசு. இன்னும் சொல்லப்போனால், இப்போதைய ரூ.10 இலட்சம் கோடி கடனோடு தான், தி.மு.க. ஆட்சி அமைந்தால் செய்ய வேண்டிய புதிய அறிவிப்புகளையும் வெளியிட்டார் திராவிட மாடல் அரசின் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

தமிழ்நாட்டின் கஜானா சரியாகத்தான் உள்ளது. நிர்வாகம் செய்யும் திறனும் மக்களைப் பற்றி சிந்திக்கும் மனமும் புதிதாக ஆள வந்திருப்பவருக்கு இருக்கிறதா?

...வினா தொடரும்.

## நலம் வருக

### சிறை புகுந்த தமிழ்ப் பெண்கள்!

1938-ஆம் ஆண்டு நவம்பர் 13-ஆம் நாள், சென்னையில் நீலாம்பிகை அம்மையார் தலைமையில், தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டிற்கு அடுத்த நாள் தருமாம்பாள், பட்டம்மாள், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், மலர்முகத்தம்மையார் உள்ளிட்டோர் இந்து தியோசபிக்கல் பள்ளி முன்பு நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மறியலில் ஈடுபட்டனர். அனைவருக்கும் ஆறு வாரங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அதன் பிறகும் நீடித்த மறியலில், மொத்தம் 72 பெண்கள் 32 குழந்தைகள் கைது செய்யப்பட்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900